
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1135

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிபுல்லா

54

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்



# காந்தி படுகொலையும் பெரியாரின் அமைதிப்படுத்தலும்!

இஸ்லாமியர்களுக்கு அரணாக, திராவிட இயக்கம் எப்போதும் இருந்திருக்கிறது என்கிற வரலாறு, நீதிக்கட்சிக் காலத்தில் இருந்தே தொடங்கிவிட்டது என்றாலும், ஆபத்துக் காலத்தில் துணை நின்ற வேளைகளில், அதன் பிடிப்பும் ஆழமும் இன்னும் உறுதிப்பட்டது. அப்படியான வரலாற்றில் மிக முக்கியமான ஆபத்துக் காலங்களில் ஒன்று, 1948 ஜனவரி 30. அன்றைய தினம், புதுடில்லியில் உள்ள ‘பிர்லா மாளிகை’யில் இருந்தார் காந்தியார். சர்தார் வல்லபபாய் பட்டேலுடன் பேசிக்கொண்டிருந்தவர், தனது அறையிலிருந்து பிரார்த்தனைக்கு நேரமாகிவிட்டது என்று பட்டேலிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பி, பிரார்த்தனை மண்டபத்தை நோக்கி நடந்தார். உடன் அவரின் பேத்தி ஆவா காந்தி, மருமகள் மனு காந்தி ஆகியோர் தோள்கொடுக்க, தோட்டத்தைக் கடந்து பிரார்த்தனை மேடைக்கு வந்தார். பிரார்த்தனை மண்டபத்தை அடைய, இன்னும் 4 அடிகளே இருந்தன. 500 பேருக்கு மேல் கூட்டம் காத்துக் கொண்டிருந்தது.

அப்போது, கூட்டத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு வந்த இளைஞன் ஒருவன், தனது உடலை வளைத்துக் குனிந்து, காந்திக்கு வணக்கம் செய்தான். காந்தியும் அவனுக்குப் பதில் மரியாதை செய்தார். பிரார்த்தனைக்கு நேரம் ஆகிவிட்டது அல்லவா என்று அவன் கேட்க, காந்தியார் சிரித்துக்கொண்டே, ‘ஆம், நேரமாகிவிட்டது’ என்றார். உடனே துப்பாக்கியை எடுத்த அவன், காந்தியாரை நோக்கி மூன்று முறை சுட்டான். நிலை குலைந்துபோன காந்தியை அருகே இருந்த ஆவா காந்தியும் மனு காந்தியும் தாங்கிப் பிடித்தனர். ஆனால், அந்த இடத்திலேயே காந்தியடிகளின் மூச்சு நின்றது. ஜனவரி 15-ஆம் தேதியிலிருந்து வகுப்புக் கலவரங்களை எதிர்த்து தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்த காந்தியார், அதற்கு சில நாட்களுக்கு முன்புதான் அந்த உண்ணாவிரதத்தை முடித்திருந்தார். அதற்குள் அவரின் உயிரையே முடித்துவிட்டான் அந்த இளைஞன். அவன் பெயர் நாதுராம் கோட்சே. மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த சித்பவன் பார்ப்பனன், ஆர்.எஸ்.எஸ். தொண்டன்.

### பரவிய வதந்தி!

காந்தியார் இறந்துவிட்ட அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தை உருவாக்க முயன்றனர் சிலர். காந்தியாரைச் சுட்டுக் கொன்றது ஒரு முஸ்லிம் என்ற வதந்தியைத் திட்டமிட்டு பரப்பினார்கள். சில நிமிடங்களிலே இந்த வதந்தி காட்டுத்தீ போல பரவியது. பல்வேறு பகுதிகளில் முஸ்லிம்கள்மீது தாக்குதலும் தொடங்கிவிட்டது. அகில இந்திய வானொலிக்கும் காந்தியைக் கொன்றது முஸ்லிம் என்ற தவறான தகவலைக் கொடுத்தனர் சிலர். மாலை 5.12-க்கே காந்தியார் கொல்லப்பட்டபோதிலும், உண்மைத் தன்மைக்காக 6 மணி வரை செய்தியை ஒலிபரப்பாமல் காத்திருந்தது, அகில இந்திய வானொலி. பின்னர்தான், “காந்தியைச் சுட்டவன், அநேகமாக ஓர் இந்துவாக இருக்குமென்று நம்பப்படுகிறது” என்று செய்தி வெளியிட்டது. ஆனால், முஸ்லிம்தான் இந்துவாக வேடம் போட்டு கொலை செய்திருப்பான் என்று தவறாகப் புரிந்துகொண்டதால், சில இடங்களில் வன்முறை வெடித்தது. சென்னை மாகாணத்திலும்கூட திருவண்ணாமலை, வாணியம்பாடி, ஈரோடு உள்ளிட்ட சில இடங்களிலும் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் நடக்கத்தொடங்கின.

> மக்கள் தங்கள் அரசியல், மத வேறுபாடுகளை மறந்து, சகோதரபாவத்துடன் நடந்துகொள்வதே நாம் காந்தியாருக்குச் செய்யும் மரியாதையாகும்.

### பாதுகாத்த பெரியார்!

பின்னர் உண்மை தெரிந்த பின்பும், வடக்கே சில இடங்களில் தாக்குதல்கள் தொடர்ந்தன. அப்போது, பார்ப்பனர்கள்மீது தாக்குதல் நடந்தது. குறிப்பாக, மகாராஷ்டிராவில் சித்பவன் பார்ப்பனர்கள்மீது வன்முறை நிகழ்த்தப்பட்டது. தமிழ்நாட்டிலோ, மிகக் குறுகிய காலத்திலேயே இந்த வன்முறைகள் கட்டுக்குள் வந்தன, காரணம் பெரியார். இத்தகைய வன்முறை நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் பெரிய அளவில் வெடிக்காமல் போனதற்கு பெரியார் 31.1.1948-இல் திருச்சி வானொலி நிலையத்தில் ஆற்றிய உரை மிக முக்கிய காரணமாக அமைந்தது. சகோதரத்துவத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்த பேச்சு, இஸ்லாமியர்கள் மீதான தாக்குதலை நிறுத்தியது மட்டுமல்ல, பார்ப்பனர்கள் மீதும் தாக்குதல் ஏற்படாதவாறு பாதுகாத்தது.

அன்றைய தினமே அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார் பெரியார். “காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டார் என்கின்ற செய்தி, எனக்குக் கேட்டதும் சிறிதுகூட நம்ப முடியாததாகவே இருந்தது. இது உண்மைதான் என்ற நிலை ஏற்பட்டதும் மனம் பதறிவிட்டது. இந்தியாவும் பதறி இருக்கும். மதமும் வைதீகமும் இக்கொலை பாதகத்துக்குத் தூண்டுகோலாக இருக்கலாம் என்பது என் கருத்து. இக்கொலைக்குத் திரைமறைவில் சதி முயற்சி இருந்திருக்க வேண்டும். அது காந்தியார் எந்த மக்களுக்காகப் பாடுபட்டாரோ, உயிர் வாழ்ந்து வந்தாரோ, அவர்களாலேயேதான் இச்சதிச் செயல் ஏற்பட்டிருக்க வேண்டும். இது மிக மிக வெறுக்கத்தக்க காரியமாகும். பெரியாரின் இப்பரிதாபகரமான முடிவின் காரணமாகவாவது நாட்டில் இனி அரசியல் மத இயல் கருத்து வேற்றுமையும் கலவரங்களும் இல்லாமல் மக்கள் நடந்துகொள்வதே அவருக்கு நாம் மரியாதை செய்வதாகும்” என்றது அந்த அறிக்கை.

### அமைதிப்படுத்திய அறிக்கை!

2.2.1948 அன்று, காந்தியாருக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில், ‘குடிஅரசு’ அலுவலகத்தில் இரங்கல் கூட்டம் நடத்தப் பட்டதுடன், அன்றைய தினம் அலுவலகத்திற்கு விடுமுறையும் விடப்பட்டது. 7.02.1948 ‘குடிஅரசு’ இதழில் இரண்டாவது அறிக்கையையும் வெளியிட்டார் பெரியார். “பெரியார், காந்தியவர்களின் விசனிக்கத்தக்க திடீர் மறைவு என்னைத் திடுக்கிட வைத்தது; இந்திய மக்கள் அனைவரையுமே இந்நிகழ்ச்சி திடுக்கிட வைத்திருக்குமென உறுதியாக நம்புகிறேன். கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாகவே, தோழர் காந்தியார் இப்பரந்த உபகண்ட மக்களின் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டியாயிருந்துவந்தார். மக்களுக்கு அவரது தொண்டு மகத்தானது. அவரது இலட்சியக் கோட்பாடுகள், உலக மரியாதையை ஏற்றுவிட்டன. காந்தியார் மீது நடத்தியிருக்கும் மோசமான தாக்குதல் கண்டனத்துக்குரியதாகும்.

பல தரப்பட்ட எல்லா வகுப்பு மக்களுக்கும் நியாயமாகவும் பாரபட்சமற்ற முறையிலும் நடந்துகொண்ட காந்தியார், இக்கொடுந் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறாரென்றால், இது மிகவும் வெறுக்கத்தக்கதாகும். இக்கொலையாளியை ஆட்டிப்படைக்கும் சதிக்கூட்டமொன்று திரைமறைவில் வேலை செய்து வர வேண்டும். வட இந்தியாவில் நடைபெற்றுவரும் காரியங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாயிருப்பது மதவெறியாகும். காந்தியாரின் இடத்தை நிறைவு செய்பவர், இந்நாட்டில் எவருமே இல்லை. மக்கள் தங்கள் அரசியல், மத வேறுபாடுகளை மறந்து, சகோதரபாவத்துடன் நடந்துகொள்வதே நாம் காந்தியாருக்குச் செய்யும் மரியாதையாகும். தென்னாட்டுத் திராவிடர்கள் இயல்பாகவே நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைக்க வைப்பர்” என்று சகோதரத்துவத்தை வலியுறுத்தினார் பெரியார்.

...நீளும்

### மதவாத மண்ணானது ஒடிசா!

ஒடிசாவில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு, அங்கு நடைபெற்று வரும் மதவாத மோதல்கள் அம்மண்ணின் தன்மையையே மாற்றி, அமைதியற்ற மாநிலமாக உருவெடுத்து வருகிறது என்ற விமர்சனங்கள் எழுந்துகொண்டிருக்கின்றன. இதனை உறுதிப்படுத்தும் விதமாக அமைந்திருக்கிறது, அம்மாநில முதல்வர் மோகன் சரண் மாஜி, சட்டமன்றத்தில் அளித்துள்ள பதில். அதாவது, ‘ஒடிசாவில் 2024-ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில் இருந்து இதுவரை 54 வகுப்புவாதக் கலவரங்கள் நடந்துள்ளன. கும்பல் தாக்குதல் சம்பவங்கள் ஏழு நடந்துள்ளன’ என்று அவர் சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளார். அதிகபட்சமாக பாலசோர் மாவட்டத்தில் 24 கலவரங்களும், கோர்த்தா மாவட்டத்தில் 14 கலவரங்களும் நடைபெற்றுள்ளன.

பிஜு ஜனதா தளம் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் கௌதம புத்தா எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்துள்ள அவர், “இந்தக் கலவரங்கள் தொடர்பாக 300 பேர் கைதுசெய்யப்பட்டனர்” என்று தெரிவித்துள்ளார். ஆனால், இதில் பாதிபேர் மீதுகூட குற்றப்பத்திரிகை பதிவு செய்யப்படவில்லை. அதேபோல ராயகடா மாவட்டத்தில் நடந்த கும்பல் தாக்குதல் தொடர்பாக, 48 பேர் கைது செய்யப்பட்டதாக மோகன் சரண் மாஜி கூறுகிறார். ஆனால், தேன்கனல் மாவட்டத்தில் ஜனவரி மாதம் பாதிரியார் ஒருவரை கடுமையாகத் தாக்கிய வழக்கில் யாருமே கைது செய்யப்படவில்லை.

அதேபோல 2025-ஆம் ஆண்டு அக்டோபரில், கட்டாக் நகரில் துர்கா பூஜையின்போது, இஸ்லாமியர் பகுதி வழியாகச் சென்ற ஊர்வலம் பெரும் கலவரத்துக்கு வித்திட்டது. 3 நாட்களுக்கு இணைய சேவையை முடக்கி, ஊரடங்கு அமல்படுத்த வேண்டிய அளவுக்கு அங்கு நிலைமை மோசமானது. ஆனால், இந்தக் கலவரம் குறித்து, மோகன் சரண் மாஜி பதிலே அளிக்காமல் கடந்துசென்றார். பா.ஜ.க. ஆட்சி தரும் துணிச்சலில் ஒடிசா மண்ணின் தன்மையை மாற்றிவிடலாம் என மதவாதிகள் செயல்படுகின்றனர். பா.ஜ.க.வை ஆதரிக்கும் எவருக்கும் மோசமான முன்னுதாரணமாக மாறிக்கொண்டிருக்கிறது ஒடிசா.

## ஃப்ளாஷ்பேக்





செல்வானந்தம்

### மிசா காலத்தில் வழக்கு நிதி!

1979-ஆம் ஆண்டு, மிசா காலத்தில் கழகத் தொண்டர்களைச் சந்திக்க கழகத் தலைவர் அவர்கள் கும்பகோணம் வருகைதந்தார். மூர்த்தி கலையரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது, மிசா வழக்கு நிதியாக ஒரு மாத ஊதியத்தைக் கொடுத்து மகிழ்ந்தேன். கும்பகோணம் நகரில், திராவிடர் கழக முன்னோடி, குடந்தை பெரியார் எனப் போற்றப்பட்ட கழகத்தின் முதல் மாநிலப் பொருளாளர் அய்யா கே.கே.நீலமேகம் அவர்கள் என் தாத்தா என்பது நான் பெற்ற பெருமை. என்றும் கழகப் பணியாற்றுவதே கழகத்துக்கும் முன்னோடி தலைவர்களின் நினைவுகளுக்கும் நான் செய்யும் தொண்டு.

– செல்வானந்தம்,
கும்பகோணம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### ‘அலை’ மறைந்துவிட்டது!

1984-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், சட்டப்பேரவைத் தேர்தல் முடிந்த ஒரு மாதத்திற்குள்ளாகவே 1985-ஆம் ஆண்டு ஜனவரியில் பெரம்பூர், எழும்பூர் சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும், வடசென்னை மக்களவைத் தொகுதிக்கும் இடைத்தேர்தல்கள் நடைபெற்றன. கழக வேட்பாளர் என்.வி.என்.சோமு, வடசென்னை மக்களவைத் தொகுதியிலிருந்தும் பரிதி இளம்வழுதி, பெரம்பூரிலிருந்தும் எஸ்.பாலன், எழும்பூரிலிருந்தும் சட்டப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இந்த மூன்று தொகுதிகளிலும் கழகத்தின் வெற்றி குறித்து எழுதிய பத்திரிகைகள், ‘1984-இல் வந்த ‘அனுதாப அலை’ மறைந்துவிட்டது’ எனக் குறிப்பிட்டன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131